# நாளைமுதல் மெட்ரோ ரயில்கள் இரவு 10 மணி வரை இயக்கம்

## ● மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவிப்பு

■ **சென்னை**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கரோனா ஊரடங்கு தளர்வைத் தொடர்ந்து சென்னையில் மெட்ரோ ரயில்களின் சேவை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, நாளை முதல் (12-ம் தேதி) வார நாட்களில் அதிகாலை 5.30 மணி முதல் இரவு 10 மணி வரையில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட உள்ளன. நெரிசல் மிகுந்த நேரங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் 5 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரையில் 10நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயிலகள் இயக்கப்படும். அரசு விதிமுறைகளை பின்பற்றி கரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முககவசம் அணியாத பயணிகளுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. இதுவரையில் 40பயணிகளிடமிருந்துரூ.8ஆயிரம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.